பொதுத் தமிழ் - முதல் பருவம்

அலகு - 1

1. **பாரதியார் சக்தியிடம் வேண்டுவன யாவை?**
   - மனதில் உறுதி வேண்டும். பேசும் வார்த்தையினிலே இனிமை நிறைந்திருக்க வேண்டும்.
   - நாம் என்னும் எண்ணங்கள் நல்லவையாக இருக்க வேண்டும்.
   - வாழ்வில் முன்னேற நாம் காணும் கனவு உண்மையாகவும், கனவின் வெளிப்பாடு கைவசமாவதற்கு வரம் வேண்டும்.
   - செல்வமும் இன்பமும் வேண்டும். நாம் வாழும் வாழ்க்கை பெருமை மிகுந்ததாக அமைய வேண்டும்.
   - எடுக்கும் காரியத்தில் உறுதியுடன் இறுதி வரை போராடும் நிலை வேண்டும்.
   - அடிமைத் தளையில் இருக்கும் பெண்களுக்கு கல்வி, மற்றும் பொருளாதாரத்தில் விடுதலை வேண்டும்.

2. **பெண்களுக்கு எல்லாம் அரசியாக விளங்கக் கூடியவர் யார்?**
   - பெண்களுக்கெல்லாம் அரசியாக விளங்கக் கூடியவர் புதுமைப்பெண். பெண்ண்டிமைத்தனம் ஒழிய வேண்டும், பெண்ணிற்கு விடுதலை வேண்டும் முதலியவற்றை இவ்வுலகிற்கு அறிவிக்கும் வகையில் புதுமைப்பெண் நற்செய்திகளைக் கூறியுள்ளார்.
   - சேற்றிலே புதிதாக முளைத்த செந்தாமரை மலர் போன்ற பொலிவினைக் கொண்டவள் புதுமைப்பெண்!
   - இந்திய நாட்டின் துன்பம் போக்கும் இனிய நற் கருத்துக்களை புதுமைப்பெண் எடுத்துரைத்தாள்.
   - மங்கையர் குல மாணிக்கமாக இவள் திகழ்ந்தாள். முற்போக்கு சிந்தனை எதையும் அலசி ஆராயும் திறம் ஆகியன புதுமைப் பெண்ணின் தனித்திறமாக உள்ளது.
   - இப்புத்துலகப் பெண் எம் குலத்தில் பிறந்தது நாம் செய்த பெருந்தவம் ஆகும். பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட புதுமைப் பெண்ணின் திருவடிகளை நான் வணங்கிப் போற்றிப் பணிகின்றேன்.

3. **அறியாமை அகற்றும் ஒளியாக புதுமைப் பெண் திகழ்வதை பாரதியார் எங்ஙனம் கூறுகிறார்?**
   - அறிவு பெற்ற மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர்கள் பித்தர்கள். நெறிகள் யாவினும் மேலோங்கி வாழ வேண்டும்.
   - மானிடர்கள் நேர்மை கொண்ட செயல்களைச் செய்வதோடு, உயர்ந்த நிலைக்கு மேலோங்கி அறிவியல் வளர்வதற்கு சிறிய தொண்டுகள் புரிய வேண்டும்.
   - பெண்ணின் அடிமைத் தளையைத் தீயிலிட்டு பொசுக்கி, ஆணும் பெண்ணும் ஒன்றெனக் கருதும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் இவ்வுலகம் அறிவில் ஓங்கி தழைக்கும்.
   - நாணமும் அச்சமும் மட நாய்கட்கு வேண்டும். ஞானமும் நல்லறமும் வீர சுதந்திரமும் நற்குடிப் பெண்களின் நற்குணங்களாகும்.
   - பெண்களுக்கு விடுதலை உண்டு என்று கூறும் புதுமைப் பெண்ணின் சொல்லானது நாரதரின் வீணையின்பமாகும். கண்ணனின் வேய்ங்குழல் இன்பமாகும்.

- வேதமே பொன்னுருவாக பெண் ஆகி மேன்மை செய்து எம்மைக் காத்திட வந்திருப்பவள். அப்பெண்னே மானிட சமுதாயத்திற்கு காதலையும் அன்பையும் கொடுக்கும் அமிழ்தம் ஆவாள்.

4. <u>புதுமைப் பெண்ணின் அருமைச் சிறப்புகளாக பாரதியார் கூறுவன யாவை?</u>
   - நற்குலத்தில் பிறந்த பெண்களுக்கு கற்பு இயல்பானதாகும். பெண்களின் அறிவை அழித்து அவள் நலத்தை காக்க விரும்புதல் தீமையாகும்.
   - புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கையும் பொய்மை கொண்ட கலியுகத்து புதுமையாகும். ஆனால் நான்கு வேத முறைப்படி மனிதர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் வழக்கமாகும்.
   - இனிய மொழி பேசும் பெண்கள் உண்மையை ஆராயும் பெரியோருடன் ஒப்புற இருந்து வந்தனர்.
   - நிமிர்ந்த நன்னடையும்; நேர் கொண்ட பார்வையும்; நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்; முதிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மையான என்றும் தன்நிலை மாறுவதில்லை.
   - அறியாமை எனும் பெரிய இருளில் கவலையின்றி வாழ்வதை பெண்கள் அறவே வெறுத்து தள்ளுதல் வேண்டும்.

5. <u>பாரதியார் போற்றும் புதுமைப் பெண்ணின் குணங்களை எடுத்துரைக்க.</u>

<u>அறியாமை அகற்றும் ஒளியாக:</u>

- அறிவு பெற்ற மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர்கள் பித்தர்கள். நெறிகள் யாவினும் மேலோங்கி வாழ வேண்டும்.
- மானிடர்கள் நேர்மை கொண்ட செயல்களைச் செய்வதோடு, உயர்ந்த நிலைக்கு மேலோங்கி அறிவியல் வளர்வதற்கு சிறிய தொண்டுகள் புரிய வேண்டும்.
- பெண்ணின் அடிமைத் தளையைத் தீயிலிட்டு பொசுக்கி, ஆணும் பெண்ணும் ஒன்றெனக் கருதும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் இவ்வுலகம் அறிவில் ஓங்கி தழைக்கும்.
- நாணமும் அச்சமும் மட நாய்கட்கு வேண்டும். ஞானமும் நல்லறமும் வீர சுதந்திரமும் நற்குடிப் பெண்களின் நற்குணங்களாகும்.
- பெண்களுக்கு விடுதலை உண்டு என்று கூறும் புதுமைப் பெண்ணின் சொல்லானது நாரதரின் வீணையின்பமாகும். கண்ணனின் வேய்ங்குழல் இன்பமாகும்.
- வேதமே பொன்னுருவாக பெண் ஆகி மேன்மை செய்து எம்மைக் காத்திட வந்திருப்பவள். அப்பெண்னே மானிட சமுதாயத்திற்கு காதலையும் அன்பையும் கொடுக்கும் அமிழ்தம் ஆவாள்.

<u>புதுமைப்பெண்ணின் சிறப்புகள்:</u>

- நற்குலத்தில் பிறந்த பெண்களுக்கு கற்பு இயல்பானதாகும். பெண்களின் அறிவை அழித்து அவள் நலத்தை காக்க விரும்புதல் தீமையாகும்.
- புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கையும் பொய்மை கொண்ட கலியுகத்து புதுமையாகும். ஆனால் நான்கு வேத முறைப்படி மனிதர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் வழக்கமாகும்.
- இனிய மொழி பேசும் பெண்கள் உண்மையை ஆராயும் பெரியோருடன் ஒப்புற இருந்து வந்தனர்.

- நிமிர்ந்த நன்னடையும்; நேர் கொண்ட பார்வையும்; நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்; முதிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மையான என்றும் தன்நிலை மாறுவதில்லை.
- அறியாமை எனும் பெரிய இருளில் கவலையின்றி வாழ்வதை பெண்கள் அறவே வெறுத்து தள்ளுதல் வேண்டும்.

6. <u>உலகின் இருளை போக்கி அழகிய ஒளியுடன் ஒளிரச் செய்த தொழிலாளர்களின் சிறப்புகளாக கவிஞன் உதாரன் கூறுவன யாவை?</u>
   - நீரோடைகள் நிலத்தைக் கிழித்து செல்லவும், நெடுமரங்கள் மிகுந்து காடாக வளரவும் அங்கே பெரு விலங்குகள் சுதந்திரமாக ஓடி, ஆடி மகிழ்வுடன் வாழ்ந்திருக்க வகை செய்தவர்கள் தொழிலாளர்கள்.
   - பருக்கை கற்களாகிய நெடுங்குன்றங்களையும், பாழ்நிலத்தை அந்நாளில் அழுகு நகர் உண்டாக்க பாடுபட்டவர்கள் தொழிலாளர்கள்.
   - சிற்றூர்களும், வரப்புடன் கூடிய வயல்களும், ஆற்று நீரைத் தேக்கி வயல்களுக்குக் கொண்டு செல்லும் வாய்க்கால்களையும் உருவாக்கியவர்கள் தொழிலாளர்கள்.
   - நிலத்தை உழுது நெற்ப்பயிர்களை நன்கு பயிரிட்டு மிகு பயன் விளைவித்த தோள்கள் தொழிலாளர்களின் தோள்களாகும்.
   - கல்லைப் பிளந்து மலையைப் பிளந்து சுரங்கங்கள் வெட்டி பல்வகைக் கருவிகளையெல்லாம் செய்து கொடுத்த கைகள் தொழிலாளர்களின் கைகளாகும்.
   - கடலின் உள்ளே மூழ்கி முத்தையும் உயர்ந்த மாணிக்கத்தையும் எடுக்க அடக்கிய மூச்சு தொழிலாளர்களின் மூச்சாகும்.
   - உலகில் இருந்த இருட்டைப் போக்கி அழகியதாக ஒளியுடன் செய்து தந்தவர்கள் தொழிலாளர்கள் ஆவர்.

7. <u>அரசனுக்கும் உதாரனுக்கும் உள்ள வழக்கினை இயம்புக.</u>
   - அரசனுக்கும் உதாரனுக்கும் ஒரு வழக்கு உண்டாயிற்று. அவ்வழக்கை பொது மக்களே தீர்ப்பதே சரியானது என உதாரன் எண்ணினான். ஆனால் அரசன் ஏற்கவில்லை. எனவே உதாரன் பொதுமக்கள் முன்னிலையில் தன் வழக்கை கூறலானான்.
   - அரசன் தன் மகளுக்கு கவிதை சொல்லிக் கொடுக்க என்னை ஆழைத்தான், அவ்வாறு கவிதை கற்றுத் தரும் போது அவள் என்னைக் காதலித்தால், நானும் ஏற்றுக் கொண்டேன்.
   - நான் என் உயிர் போவதற்காக அழவில்லை. அழகிய எழுதாத சித்திரம் போல் இருக்கும் அமுதவல்லியின் உடல் வெட்டப்படும், அந்த மாபழி தமிழுக்கு வந்து சேருமே என்று எண்ணியே அழுகிறேன்.
   - அரசனுக்கு பின் இந்த தூய நாட்டை ஆளுதற்கு பிறந்த ஒரு பெண்ணை கொல்லக் கூடிய அதிகாரம் அரசனுக்கா? உங்களுக்கா? எனக் உதாரன் மக்களிடம் கேட்டான். இதுவே அரசனுக்கும் உதாரனுக்கும் உள்ள வழக்காகும்.

8. <u>அமுதவல்லியையும், உதாரனையும் மக்கள் மீட்ட விதம் பற்றிக் கூறுக.</u>
   - உதாரன் கொலைக்களத்தில் கத்தியின் கீழ் தலை குனிந்து நின்றான். இக்காட்சியைக் கண்ட அழகிய சிலையை பால் அபிசேகம் செய்து பார்ப்பது போல அமுதவல்லியின் கண்ணீர் வெள்ளம் அவளது அடிகளில் சொரிவதைக் கண்டனர்.
   - அங்கிருந்த மக்கள் அனைவரும் ‘ஓ’ எனக் கதறி அழுதனர். அன்பு செய்தோர் இவ்வுலகில் வாழ்தல் கூடாதோ? என்று அமுதவல்லி பதைபதைத்தாள்.

- இதை கேட்ட நாட்டு மக்கள் 'இது கொடியது' என்றார்கள். சொல்லியதோடு கொடுவாளைக் கொலைஞர் கைகளில் இருந்து பறித்தனர். அந்தக் கொலையாளர்கள் உயிர் தப்ப ஓடலாயினர்.
- மக்கள் கவிஞனுக்கும் அமுதவல்லிக்கும் மீட்சி தந்தனர்.

9. <u>பாரதிதாசன் 'பேரன்பு கொண்டவரே என்ற கவிதையில் வெளிப்படுத்தும் புரட்சிக் கருத்துக்களை விளக்கி எழுதுக?</u>

<u>தொழிலாளர்களின் சிறப்பு:</u>

- நீரோடைகள் நிலத்தைக் கிழித்து செல்லவும், நெடுமரங்கள் மிகுந்து காடாக வளரவும் அங்கே பெரு விலங்குகள் சுதந்திரமாக ஓடி, ஆடி மகிழ்வுடன் வாழ்ந்திருக்க வகை செய்தவர்கள் தொழிலாளர்கள்.
- பருக்கை கற்களாகிய நெடுங்குன்றங்களையும், பாழ்நிலத்தை அந்நாளில் அழுகு நகர் உண்டாக்க பாடுபட்டவர்கள் தொழிலாளர்கள்.
- சிற்றூர்களும், வரப்புடன் கூடிய வயல்களும், ஆற்று நீரைத் தேக்கி வயல்களுக்குக் கொண்டு செல்லும் வாய்க்கால்களையும் உருவாக்கியவர்கள் தொழிலாளர்கள்.
- நிலத்தை உழுது நெற்பயிர்களை நன்கு பயிரிட்டு மிகு பயன் விளைவித்த தோள்கள் தொழிலாளர்களின் தோள்களாகும்.
- கல்லைப் பிளந்து மலையைப் பிளந்து சுரங்கங்கள் வெட்டி பல்வகைக் கருவிகளையெல்லாம் செய்து கொடுத்த கைகள் தொழிலாளர்களின் கைகளாகும்.
- கடலின் உள்ளே மூழ்கி முத்தையும் உயர்ந்த மாணிக்கத்தையும் எடுக்க அடக்கிய மூச்சு தொழிலாளர்களின் மூச்சாகும்.
- உலகில் இருந்த இருட்டைப் போக்கி அழகியதாக ஒளியுடன் செய்து தந்தவர்கள் தொழிலாளர்கள் ஆவர்.

<u>அரசனுக்கும் உதாரனுக்கும் உள்ள வழக்கு:</u>

- அரசனுக்கும் உதாரனுக்கும் ஒரு வழக்கு உண்டாயிற்று. அவ்வழக்கை பொது மக்களே தீர்ப்பதே சரியானது என உதாரன் எண்ணினான். ஆனால் அரசன் ஏற்கவில்லை. எனவே உதாரன் பொதுமக்கள் முன்னிலையில் தன் வழக்கை கூறலானான்.
- அரசன் தன் மகளுக்கு கவிதை சொல்லிக் கொடுக்க என்னை ஆழைத்தான், அவ்வாறு கவிதை கற்றுத் தரும் போது அவள் என்னைக் காதலித்தால், நானும் ஏற்றுக் கொண்டேன்.
- நான் என் உயிர் போவதற்காக அழவில்லை. அழகிய எழுதாத சித்திரம் போல் இருக்கும் அமுதவல்லியின் உடல் வெட்டப்படும், அந்த மாபழி தமிழுக்கு வந்து சேருமே என்று எண்ணியே அழுகிறேன்.
- அரசனுக்கு பின் இந்த தூய நாட்டை ஆளுதற்கு பிறந்த ஒரு பெண்ணை கொல்லக் கூடிய அதிகாரம் அரசனுக்கா? உங்களுக்கா? எனக் உதாரன் மக்களிடம் கேட்டான். இதுவே அரசனுக்கும் உதாரனுக்கும் உள்ள வழக்காகும்.

<u>அமுதவல்லியையும், உதாரனையும் மக்கள் மீட்டனர்</u>

- உதாரன் கொலைக்களத்தில் கத்தியின் கீழ் தலை குனிந்து நின்றான். இக்காட்சியைக் கண்ட அழகிய சிலையை பால் அபிசேகம் செய்து பார்ப்பது போல அமுதவல்லியின் கண்ணீர் வெள்ளம் அவளது அடிகளில் சொரிவதைக் கண்டனர்.
- அங்கிருந்த மக்கள் அனைவரும் 'ஓ' எனக் கதறி அழுதனர். அன்பு செய்தோர் இவ்வுலகில் வாழ்தல் கூடாதோ? என்று அமுதவல்லி பதைபதைத்தாள்.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி

- இதை கேட்ட நாட்டு மக்கள் 'இது கொடியது' என்றார்கள். சொல்லியதோடு கொடுவாளைக் கொலைஞர் கைகளில் இருந்து பறித்தனர். அந்தக் கொலையாளர்கள் உயிர் தப்ப ஓடலாயினர்.
- மக்கள் கவிஞனுக்கும் அமுதவல்லிக்கும் மீட்சி தந்தனர்.

10. <u>ஆசிய ஜோதி குறிப்பு வரைக?</u>
    - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய புகழ்பெற்ற நூல் ஆசிய ஜோதியாகும்.
    - எட்வின் அர்னால்டு எழுதிய என்ற நூலுக்கு இவர் எழுதிய தமிழாக்கமே ஆசியஜோதியாகும்.
    - உமர்கயாம் பாரசீக மொழியில் பாடியதை ஆங்கிலத்தில் மொழிபெயர்தவர் பிட் ஜெரால்டு. அம்மொழி பெயர்ப்பைத் தழுவித் கவிமணி உமர்கய்யாம் பாடல்களைப் பாடியுள்ளார்.
    - புத்தரின் வாழ்க்கை வரலாற்றை அடியொற்றி எழுதியதாகும்.

11. <u>ஏழைச் சிறுவனிடம் புத்தர் கூறிய அமுத மொழிகள் யாவை?</u>
    - ஏழைச் சிறுவன் தன் கையால் புத்தருக்கு அருந்த பால் கொடுக்க தயங்கினான். அப்போது புத்தர் சிறுவனை நோக்கி அமுத மொழிகளைக் கூறினார்.
    - வாழ்வில் துன்பம் வரும் போதும் உள்ளம் இரங்கிடும் போதும் உடன் பிறந்தவர் போல் உதவ வருபவர்கள் யாரும் சாதி பார்ப்பதில்லை.
    - உடலில் ஓடும் உதிரத்திலும் ஒழுகும் கண்ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதில்லை. அனைவரின் உடம்பில் ஓடும் இரத்தத்தின் நிறம் சிவப்பேயாகும்.
    - கண்களில் இருந்து வரும் கண்ணீரின் சுவை உவர்ப்பேயாகும். இது இயற்கை குணமாகும். இதை யாராலும் மாற்ற இயலாது.
    - பிறப்பினால் எவர்க்கும் பெருமை வருவதில்லை. அவர்கள் உலகில் செய்யும் நல்ல செயல்கள் மூலமே பெருமை வந்து சேரும்.
    - நன்மை செய்வோரே மேல் குலத்தார். மற்றவரை துன்பப் படுத்தும் எவரும் கீழ் குலத்தவரே என புத்தன் ஏழைச் சிறுவனிடம் இவ்வுலகில் சாதிகள் இல்லை அனைவரும் சமமே என எடுத்துரைத்தார்.

12. <u>கவிஞருக்கும் இறைவனுக்குமான உரையாடல் சிலவற்றை எழுதுக.</u>
    - அறிவென்பது யாது எனக் கேட்டன் அறிந்து பாரென இறைவன் பணித்தான்.
    - அன்பெனப்படுவது பிறர்க்கு கொடுத்தலால் பெறுவது.
    - பாசம் என்பது பிள்ளைகள் பெற்று வளர்ப்பதால் ஏற்படுவது.
    - முதுமை என்பது தன் வாழ்வின் அனுபவத்தால் முதிர்ந்து இருப்பது.
    - வறுமையை உண்மையில் வறுமையில் வாடும போதே உணர முடியும்.
    - அடுத்தவர் படும் கஷ்டத்தால் அதன் உணர்வினைப் பெற இயலாது.

13. <u>நட்புக் காலம் கவிதையில் வெளிப்படும் கருத்துக்களை எழுதுக.</u>
    - நட்பே உன்னுடைய பிறந்த நாளுக்கான வாழ்த்தைத் தெரிவிக்க, வாழ்த்து அட்டைகளில் நல்ல வாசகத்தைத் தேடித் தேடி கிடைக்காமல் ஏமாந்து, சலிப்படைந்த நிலையில் தான் உனக்கான என் கவிதையை எழுதத் தொடங்கினேன்.
    - நீ என்னிடம் பல விதமான கருத்துக்களைப் பகிர்ந்து பேசும் பேச்சில் எல்லாம், என்னைப் பற்றியும், எனக்காகப் பரிந்து பேசிய பேச்சுக்களும் தான் மிகுதி. அதில் நான் நமக்குள் இருக்கும் நட்பை நன்கு உணர்ந்து கொண்டேன்.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி

- அடிவானத்தை மீறிய மனதின் ஆழத்தைக் கொள்ளை கொள்ளும் உலகின் அழகு என்பது ஒன்று உள்ளது. அது பயமில்லாத இரண்டு மிகச்சிறிய இதயங்களுக்கு இடையேயுள்ள நட்பில் தான் இருக்கிறது.
- சிறுவயதில் நமது பள்ளி விளையாட்டு மைதானத்தில் நாம் பரிமாறிக் கொண்ட காலை வணக்கத்தைக் காற்றானது கலைத்தது. அப்பொழுது கண்களை மூடிக் கொண்டோம். அக்காட்சி நினைவலையாக என் மனக்கண்ணில் தெரிகிறது.
- நம் நட்பின் உன்னதத்தை புரிந்து கொள்ளப்படாத நாட்களில், எழுதப்படாத என் நாட்குறிப்பின் வெறுமையில் தானாகவே வந்து அமர்ந்திருப்பது எனக்குப் பிடித்தமான உன் புன்னகை மட்டுமே என்று குறிப்பிடுகிறார்.

14. <u>ஏழைத் தாயொருத்தியின் வீடு இடிக்கப்படும் அவலத்தினை வைரமுத்துவின் கவிதை வழி எழுதுக.</u>
    - புறம் போக்கு நிலத்தில் கட்டப்பட்ட தன் வீட்டை சர்க்கார் ஆட்கள் இடிக்க வந்த போது அதைத் தாங்க மாட்டாத தாய் புலம்புகிறாள்.
    - செலந்தி போல கட்டிய கனவு விட்டை இடிக்க வந்தீகளா. அரைச் செண்டில் கட்டிய என் சிறிய வீட்டை இடிக்க ஆர்டர் வாங்கி வந்தீங்களா?
    - சித்தெறும்பு நசுக்கத்தான் சீப்பேறி வந்தீகளா எனக் கேட்கிறாள்.
    - எத்தி உதைச்சாலே இடித்துவிடும் கவருக்கு கடப்பாரை எதுக்கய்யா, என்று ஏழைத்தாய் புலம்புகிறாள்.

15. <u>வீட்டைக் கட்ட ஏழைத் தாய் பட்ட பாடு யாது?</u>
    - ஏழைத் தாயான அவள் தன் வீட்டினைக் கட்ட பெரும் பாடுபடுகிறாள். முன் சுவரு எழுப்ப என் மூக்குத்தி அடகு வெச்சேன். பித்தாளக் குடம் வித்து பின் சுவரு கட்டி வைச்சேன். கதவுக்கு மரம் வாங்க பணமில்லாமல் கோணிப்பையால் கதவு மாட்டினேன்.
    - சீட்டுப் புடிச்சு சித்தாளு வேலை செஞ்சு ஓட்டக் கூரைக்கு ஒரு பகுதி ஓடு வச்சேன். கூட்டைக் கலைச்சுட்டா குறுவிக்கு வேறு மரம், வீட்டை இடித்துவிட்டால் நான் எங்கு போவேன் எனத் தான் பட்ட துயரத்தை கூறுகிறாள்.

16. <u>வீட்டை இடிக்கும் ஆட்களிடம் ஏழைப்பெண் வேண்டுவது யாது?</u>
    - வீட்டை இடிப்பது என முடிவான பின அவள் செய்வது அறியாமல் தவிக்கிறாள். இறுதியாக அவள் இடிக்கும் ஆட்களிடம் "கொல்லையில என் மகன் மல்லிகைக் கொடி நட்டிருக்கிறாள்.
    - நீர் குடிச்சு கொடி இப்பத்தான் வேர் புடிச்சி நின்னிருக்கு. பொத்தி வளர்த்த கொடி பூ பூக்கும் முன்னால் கத்தியால் வெட்டாதீக, கடப்பாரை வீசாதீக.
    - ஆசையில் வச்ச கொடி அசங்காம இருக்கட்டும். என் மகள் வச்ச மல்லிகை மற்றவருக்கு பூக்கட்டும்" என வேண்டினாள்.

17. <u>வாழை தன் பெருமைகளாக கூறுவன யாவை?</u>
    - குட்டை மரமென்று என்னை அனைவரும் கூறினாலும், என் பெரிய இலைகளால் என் குறையை தகர்த்தெறிபவன் நான்.
    - என் இலைகளின் நிறமானது மயிலிடம் கடன் வாங்காத பச்சை நரம்புகளால் ஆன தோகைகளை உடையது.
    - கலைகளில் இன்றியமையாத சமையற்கலை இலை என்னும் வாகனத்தில் ஏறும் போது தான் விரலின் வரவேற்பு கிடைக்கிறது. சோற்று பூமியின் சொர்க்க வாசல்கள்

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி

- ஏழை வயிறுகளின் இலட்சிய கனாக்கள் என வாழை தன் இலையின் பெருமைகளைக் கூறுகிறது.

18. தாலாட்டு பாடலின் மூலம் வெளிப்படும் உறவுகளின் மேன்மைகளை எழுதுக.
    - உயர்ந்த தலைப்பாகையும் உல்லாச வல்லவட்டும் உடுத்தி சபை தன்னில் பேசும் தாய்மாமன், கடிநாயை காவலுக்கு கொண்டு சென்று வேட்டைக்கு போகும் வீரப்புலி உன் மாமன்.
    - கைகளிலே சிங்கம் சிக்குமோ, பதினெட்டு மான்படுமோ? என இவ் வரிகளின் மூலம் தாய் மாமனின் பெருமையினை தன் குழந்தைக்கு தாலாட்டின் மூலம் கூறுகிறார்.
    - பெண் தன் குழந்தைக்கு தன் பிறந்த வீட்டின் பெருமையினையும் உடன் பிறந்த தம்பிகளின் வீரத்தினையும் எடுத்துக் கூறுவதற்கு தாலாட்டுப் பாடலையே பயன்படுத்துகிறாள்.

19. குழந்தையை யார் யாரெல்லாம் அடித்தனர்? எனத் தாலாட்டு பாடல் கூறுகிறது?
    - குழந்தை அழும் போது தாயானவள் அதன் அழுகையை நிறுத்த பாடும் பாடலே தாலாட்டு ஆகும். உன்னை யாரடிச்சாரை சொல்லி அழு அவர்களுக்கு தண்டனை கொடுப்போம் எனப் பாடுவாள்.
    - பாட்டியடிச்சாளோ பால் வார்க்கும் கையாலே, மாமன் அடிச்சாரோ மல்லிகைப் பூச் செண்டாலே, அத்தை அடிச்சாளோ அரளிப்பூச் செண்டாலே, அண்ணன் அடிச்சாளோ அணைத்தெடுக்கும் கையாலே.
    - அடிச்சாரை சொல்லியழு அவர்களுக்கு தண்டனைகள் கொடுத்திடுவோம் என தன் பாடலின் மூலம் குழந்தைகளுக்கு பல உறவுகளைக் கூறி அவர்களின் அன்பையும் பதிய வைக்கிறாள் தாய்.

20. கணவனை இழந்த பெண்ணின் மனப் புலம்பலை ஒப்பாரிப் பாடல் வழி கூறுக.
    - கணவனை இழந்த பெண்ணொருத்தி தான் இழந்ததை எண்ணி அழுகிறாள். கரையில் இருந்த ஆலமரம் வீழாது இருக்கும் என கவலையின்றி இருந்தேன். கரையிடிஞ்சு மரம் சாய்ந்து விட்டதென அழுகிறாள்.
    - கணவனின் நினைவுகள் தன்னை நெருஞ்சி முள்ளாகக் குத்த தன்னை விட்டு சென்று விட்டதாய் புலம்புகிறாள். தலை சீவி தாழம்பூச் சூடினேன். ஆனால் என் தலையெழுத்தை தாயாரும் அறியவில்லை.
    - மானழுக மயிலழுக மாடப்புறாக் குஞ்சழக சிவகிரிக் கனங்களெல்லாம் தெருத் தெருவாய் நின்றழுக எமன் வந்து கூப்பிட்டதும் என் நிலை எண்ணிப் பாராமல் என்னை விட்டுச் சென்று விட்டீரே என கண்ணீர் வடிக்கிறாள்.

21. கனவு நாயகனின் பெருமைகளைக் கூறுக.
    - அரசுப் பள்ளியில் படித்த போதும் தன் உழைப்பால் மேலே உயர்ந்து குடியரசுத் தலைவர் பதவியில் அமர்ந்தவர்.
    - சாதி மதங்களைக் கடந்து அனைவராலும் நேசிக்கப்படுபவர். பல விருதுகள் அவரைத் தேடி வந்தாலும் விருதுகளுக்கே பெருமைத் தேடித் தந்தவர்.
    - குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்ததை விட குடிமக்களின் உள்ளத்தில் குடியேறியதே உன் பெருமையாகும்.
    - அக்கினிச் சிறகுகள் எனும் நூலின் மூலம் இந்நாட்டின் புகழை உச்சிக்கே கொண்டு சென்ற பெருமை உன்னைச் சாரும்.

- விஞ்ஞானியாகவும், மெய்ஞானியாகவும், கவிஞனாகவும், மனிதாபிமானியாகவும், ஆசிரியராகவும் மற்றும் தேசப்பற்றாளராகவும் திகழ்ந்த பெருமை உன்னை மட்டுமே சேரும்.
- இவ்வாறாக அப்துல் கலாமின் பெருமைகளை அப்துல் ரகுமான் எடுத்துரைக்கிறார்.

22. <u>இவ்வுலகம் அறிவில் உயர்வடைய நாம் செய்ய வேண்டியன யாவை?</u>
    - ஆணும் பெண்ணும் சரிநிகர் என்று கருதும்போது தான் இந்நிலவுலகம் அறிவில் உயர்வடையும்.
    - ஒரு நாடு முன்னேற வேண்டும் என்று விரும்புபவர்கள் ஆணையும், பெண்ணையும் சரிசமமாக நடத்த முன்வர வேண்டும்.
    - நற்குடியில பிறந்த பெண்கள் ஞானம், நல்லறம், வீரசுதந்திரம் முதலியவற்றைப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.
    - பெண்ணைத் தெய்வமாக எண்ணி அவளைப் போற்றிப் பணிய வேண்டும். அவளுடைய எண்ணங்களுக்கு மக்கள் மதிப்பளிக்க வேண்டும்.
    - ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்களில் கூறப்பட்டுள்ள மெய்ம்மைச் சிந்தனைகளை உணர்ந்து மக்கள் வாழ முயற்சிக்க வேண்டும்.
    - பெண்களும் அறநெறியாளர்களின் நெறிமுறைகளின்படி வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பாரந்து விரிந்த இவ்வுலகம் அறிவில் உயர்வடையும்.

23. <u>புதுமைப்பெண்ணின் குணாதிசயங்கள் எவை?</u>
    - நிமிர்ந்த வீறு கொண்ட நன்னடை, நேர்கொண்ட அறம் மீறாத பார்வை, இவ்வுலகில் அஞ்சாத வழிமுறைகள் ஆகியன புதுமைப் பெண்ணின் தனி குணாதிசயங்கள் ஆகும்.
    - உதய கன்னியாக உருமாறிய புதுமைப் பெண், பெண்டிர் அறியாமை இருளில் மூழ்கி இருத்தல் கூடாது.
    - ஆணிற்கு அடிமைப்பட்டு வாழ்தல் கூடாது, முழுஅறிவுத் திறமையுடன் தன் வாழ்வை நடத்துதல் வேண்டும் என்று கூறுகிறார்.
    - பெண்கள் அடிமைத்தளையில் கட்டுண்டுச் சிதறாமல் வீறுடன் புத்துணர்ச்சி பெற்று எழல் வேண்டும்.
    - தன்னளவில் புத்துலகைப் படைக்க முற்படும் பெண்ணானவள் வீரம், பகுத்தறிவு, சுய ஆளுமை, கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டிலங்குகிறாள்.
    - அநீதிகளைச் சுட்டெரிக்கும் தீப்பிழம்பாக புதுமைப்பெண் புறப்பட்டிருக்கிறாள்.
    - நேர்மை, துணிவு, கடமை உணர்வு, கண்ணியம் காத்தல், கற்பு நெறியில் ஒழுகுதல் முதலியவற்றை தன் ஒப்புயர்வற்ற நல்ல குணாதிசயமாகப் புதுமைப் பெண் கொண்டிலங்குவதாகப் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

24. <u>உறுதி வேண்டும் என பாரதியார் வேண்டுவன யாவை?</u>
    - நம்முடைய மனமானது உறுதியுடனும், தெளிவுடனும் இருத்தல் வேண்டும்,. நாம் பேசக்கூடிய சொற்கள் பிறரைப் புண்படுத்தாமல் இனிமை நிறைந்த நல்ல சொற்களாக இருத்தல் வேண்டும்.
    - நாம் எண்ணக்கூடிய எண்ணங்கள் நல்ல எண்ணங்களாக நேர்மைக் குணம் மிக்கனவாக இருத்தல் வேண்டும். நாம் விரும்பிய பொருட்கள் நமக்குக் கிடைக்கப் பெறல் நன்மையைத் தரும்.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி

- நாம் காணக்கூடிய கனவுகள் உண்மையாக வேண்டும். கைவசமாகக் கூடிய நற்செயல்களை நாம் உடனே செய்து முடித்து வெற்றிபெற வேண்டும்.
- நம்முடைய வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான செல்வம் நம்க்குக் கிடைக்கப் பெறல் வேண்டும்.
- இன்பமான வாழ்க்கை வாழ நாம் முயற்சிக்க வேண்டும். இவ்வுலகில் பிறந்தோம்; வாழ்ந்தோம்; மறைந்தோம் என்றில்லாமல் பெருமைமிக்க வாழ்வை நாம் வாழ வேண்டும்.
- நம்முடைய வாழ்வில் விழிப்புணர்வுடன் நாம் கண்திறந்து வாழ வேண்டும்.
- நாம் செய்யக்கூடிய செயல்கள் யாவும் உறுதி நிறைந்ததாக இருத்தல் வேண்டும். பெண்களின் வாழ்வில் விடுதலை ஏற்படல் வேண்டும்.
- பெண்ணிற்கு உரிமை கிடைத்து மேன்மைமிக்க வாழ்வை அவர்கள் வாழ வேண்டும். பெரிய கடவுள் நம்மைக் காத்தருள வேண்டும்.
- இந்த மண்ணுலகம் பயன்பெறும்விதத்தில் நம்முடைய வாழ்வு அமைதல் வேண்டும்.
- வானத்தை எட்டும்படியான உயரிய வாழ்வைப் பெற்று நாம் உயர்வடைய வேண்டும். உண்மை மட்டுமே வெற்றி பெற வேண்டும்.

25. <u>ஆணும் பெண்ணும் சமம் என்ற பாரதியின் கூற்றை உரைத்திடுக.</u>

- ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமென கொண்டு அறிவிலே ஓங்கி உயர்ந்து விளங்கினால் இவ்வுலகம் மேன்மை அடையும். தாயாகிய சிவ சக்தியே நல்லறம் கொண்டு பெண் உருவாக விளங்குகின்றாள்.
- நாணமும் அச்சமும் நாய்களின் குணமாகும். ஞானமும் நல்லறமும் வீரமும் சுதந்திர எண்ணங்களும் நற்குடியில் பிறந்த பெண்களின் குணங்களாகும்.

  "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
  அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்"

  ஆணும் பெண்ணும் அறிவினால் சம்மானவர்களே என்பதை அனைவரும் உணர வேண்டும் என்பதே பாரதியின் நினைவாகும்.
- புதுமைப் பெண்ணின் சொற்களும் செயல்களும் பொய்யான கலிகாலத்திற்கு புதிதாகும். ஆனால் வேத முறைப்படி மனிதர் வாழ்ந்த காலத்தே ஆணும் பெண்ணும் சமமாகவே கருதப்பட்டனர்.
- இனிமையான அழகான தேன் போன்ற மொழி பேசும் பெண்கள், உண்மையை ஆராய்ந்தறியும் தவ முனிவர்களுடன் ஒன்றாகவே வாழ்ந்தனர்.
- முதுமை காலத்தே வேதங்கள் பேசிய முறைமை மாறிட கேடுகள் பல தோன்றின. பழைய காலத்தில் பெண்களை அனைத்திலும் சமமாக நடத்தினர்.
- இப்போக்கு காலப்போக்கில மாறுபட்டு பெண்ணை வீட்டில் பூட்டி வைத்தனர். இந்நிலை மாற வேண்டும் எனப் பாரதி போராடினான்.
- தன் கவிதைகள் மூலமும் பேச்சின் மூலமும் பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டான் பாரதி.

26. <u>யாரைக் காப்பாற்றும்படி உதாரணன் மக்களிடம் வேண்டினான்?</u>

<u>*அமுதவல்லி:*</u>

உதாரணன் மக்களிடம் யான் இறந்தாலும் அமுதவல்லி இறத்தல் சரியல்ல எனக்கூறினான். ஏனெனில், அரசனுக்குப்பின் இந்த தூய நாட்டை ஆளுதற்குப் பிறந்த ஒரு பெண்ணை, ஒப்பற்ற பெண்ணைக் கொல்லக் கூடிய அதிகாரம் அரசனுக்கு இல்லை. அரசன் வழிவழியாக வரும் சட்டத்தை அவமதித்தான். ஒருவர் தலையை

வெட்டி அவனை அழித்தால் அரசனுக்கு ஒரு பொழுது போக்கும் விளையாட்டாகும். நமக்கெல்லாம் உயிரின் வாதையாகும்.

மக்களாட்சி:

அரசனின் மகளாகிய அமுதவள்ளி தன் ஆட்சிக்காலத்தே நாடாலும் உரிமையை மக்கட்கே பொதுவாக்க நினைத்திருந்தாள். இன்று அவள் சாவில் நிற்கின்றாள். அவளைக் காப்பீர் என் மக்களே என வேண்டினான்.

உதாரனின் இறுதி உரை:

அன்பு நாடே! இவ்வுலகில் உன்னிடமுள்ள அழகிய ஆற்றை உயர் மலையை தேனை அள்ளி அள்ளிக் கொடுக்கும் நறுஞ்சோலையினைத் தமிழாற் பாடும் ஆவல் இன்னும் தீர்ந்த்தில்லை. அப்பேராவல் எனது மெய் இதயம் அறுபடவும் இரத்தம் வெள்ப்படவும் தீரும் போலும். என்னாடு பொன்னாடாக வாழ்க என் நாட்டிலே வாழும் என் மக்கள் யாவரும் உரிமை பெற்ற மக்களாக வாழ்க விண் வீழ் கொள்ளி வீழ்வது போல் மண்ணிடையே வீழ்வது போல் தனித் தாளும் கொடிய ஆட்சி சர்வாதிகார ஆட்சி வீழ்ந்து ஒழிவதாக எனக் கூறி மக்களுக்கு தன் கடைசி வணக்கம் செய்தான் உதாரன்.

27. **புத்தர் ஏழைச் சிறுவனுக்கு போதித்த இயற்கையின் உண்மைகளைக் கூறுக.**

முன்னுரை:

எட்வின் அர்னால்டு எழுதிய என்ற நூலுக்கு கவிமணி எழுதிய தமிழாக்கமே ஆசிய ஜோதியாகும். இந்நூல் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக எடுத்தியம்புகிறது.

புத்தரை சிறுவன் காணல்:

அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த கலைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன் உலகமக்கள் காண்பதற்கு அரியதாக விளங்கக்கூடிய ஐயனாகிய புத்தரைத் தெய்வமாக நினைத்து கைகள் குவித்து வணங்கி நின்றான்.

புத்தரின் மயக்கம் தெளிதல்:

நிலத்தில் மயங்கிக் கிடந்த புத்த பெருமான் மெல்ல நிமிர்ந்து இடைச் சிறுவனிடம் கலத்தினில் கொஞ்சம் பாலை தரச் சொல்லிக் கேட்டார்.

சிறுவனின் மறுமொழி:

புத்தர் கூறியதைக் கேட்ட இடைச் சிறுவன், அண்ணலே உன்னை என் கையால் தீண்டுதல் கூடாது. நான் ஒரு இடையன் ஆவேன் எனப் பதிலுரைத்தான்.

புத்தரின் அமுதமொழி:

உலகம் போற்றும் புகழை உடைய பெரியோன் புத்தபிரான் சிறுவன் கூறியதைக் கேட்டு கருணையினால் அமுத மொழிகளைக் கூறலாயினான்.

துன்பம் வரும் போதும் உள்ளம் இரங்கிடும் போதும் நம் இன்னல்கள் போக்கிட உடன் பிறந்தவர் போல் மக்கள் உறவு கொண்டு உதவி செய்வர். அந்நேரத்தில் ஓடும் இரத்தத்திலும் வடிந்து ஒழுகும் கண்ணீரிலும் எங்கு தேடிப் பார்த்தாலும் சாதி தெரியாது.

இயற்கையின் உண்மை:

இவ்வுலகில் வாழும் எவர் உடம்பிலும் ஓடும் இரத்தத்தின் நிறம் சிவப்பாகும். எவரின் விழியிலிருந்து வடியும் நீரின் சுவை உவர்ப்பே ஆகும். இதுவே இயற்கையின் உண்மையாகும்.

முடிவுரை:

"பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது" என்பதே ஆசியஜோதியின் மூலமாக கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை உரைக்கின்றார்.

28. <u>அனுபவித்து வாழ்வதே வாழ்வு என்ற உண்மையை கடவுள் கூற்றாக கண்ணதாசன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?</u>

கண்ணதாசனின் கவிதைகள் ஆழ்ந்த தத்துவமும் இலக்கிய செறிவும் நிறைந்ததாய் இருக்கும் இவருடைய கவிதைகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. திரைப்படப் பாடல்களில் தத்துவம் மிகுந்த பல பாடல்களை இவர் பாடியுள்ளார்.

இறைவனோடு உரையாடல்:

பிறப்பின் பின் வருவது யாது என இறைவனைக் கேட்டேன். பிறந்து பார் என இறைவன் கூறினான். படிப்பெனச் சொல்வது யாது என வினவினேன். படித்துப்பார் புரியும் என்றான்.

அறிவு:

அறிவு என்பது எது என கேட்டபோது எதையும் வாழ்வில் நாம் அறிந்து கொள்ளும் போது பெறப்படும் பாடமே அறிவாகும் என்றான்.

அன்பு:

அன்பென்பது யாது எனக் கேட்டபோது உன்னிடம் உள்ளதை பிறர்க்கு கொடுத்து பார். அன்பு எப்படிப்பட்டது என உனக்கு புரியும். பிறரின் மகிழ்வில் நாம் மகிழ்வதே அன்பாகும்.

பாசம்:

மற்றவர் என் மீது கொண்ட பாசத்தை நான் எப்படி உணர்வது என்று கேட்டபோது உன் அன்பை எதிர்பார்ப்பு இல்லாமல் பகிர்ந்து பார் பாசம் புரியும் என்றார்.

மனைவி:

மனைவியின் மூலம் ஒருவன் பெறும் இன்பம் எத்தகையது எனக் கேட்டேன். ஒரு பெண்ணை மணந்து விரும்பி இல்லறம் நடத்தினால் வாழ்வென்பது எது எனப் புரியும் என்றார்.

பிள்ளைப்பாசம்:

பிள்ளைகள் என்பது யார் எனக் கேட்டேன் இனிய இல்லறம் நடத்தி பிள்ளைகளைப் பெற்றுப்பார் என்றான் இறைவன்.

முதுமை வறுமை இறப்பு:

முதுமைப் பருவம் எப்படிப்பட்டது என்ற போது முதுமைவரைக் காத்திருந்து முதிர்ந்து பார் என்றான். வறுமையை அறிய எல்லாவற்றையும் இழந்து பார் என்றான். இறப்புக்கு பின் வாழ்வு எப்படி இருக்கும் எனக் கேட்டபோது இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவமே இறைவன்:

எல்லாவற்றையும் நான் அனுபவித்துதான் கற்றுக் கொள்ள வேண்டுமெனில் இறைவனே நீ எதற்கு எனக் கேட்டேன். அந்த அனுபவமே நான் தான் என அன்பால் நெருங்கி வந்து கூறினான்.

நாம் வாழ்வில் அனுபவிக்கும் ஒவ்வொரு அனுபவமும் இறைவனை அறியும் பாடம் என கவிஞர் உரைக்கின்றார்.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி

29. <u>ஏழைகளின் கனவு அதிகார வர்க்கத்தால் நசுக்கப் படுவதை வைரமுத்து எவ்வாறு எடுத்துரைக்கிறார்?</u>

ஏழைப் பெண்ணொருத்தி தன் குடிகார கணவனோடு போராடி தன் உழைப்பால் சிறுக சிறுக கட்டிய வீட்டை இழக்கும் போது அவர் படும் பாட்டை வைரமுத்து தன் வரிகளின் மூலம் நேர்த்தியாக வெளிப்படுத்துகிறார்.

தான் கட்டிய வீட்டை சர்க்கார் ஆட்கள் இடிக்க வருவதைக் கண்டு பதைபதைத்து போகிறாள். தன் மகனை அழைத்து கள்ளுக்கடையில் இருக்கும் தன் கணவனை கையோடு கூட்டி வரச் சொல்கிறாள்.

சர்க்காரு சாமிகளா நான் வியர்வை சிந்தி சிலந்தி கூடு கட்டுவது போல கட்டிய வீட்டினை இடிக்க வந்தீங்களா…. சித்தெரும்பு போல சின்னதாய் இருக்கும் என் வீட்டை இடிக்க ஜீப்பேறி வந்தீங்களா எனப் புலம்புகிறாள்.

வெள்ளாட்டு காம்பில் விஷம் வடியக் கனவு கண்டேன். ஓடையெல்லாம் இரத்தம் ஓடிவரக் கனவு கண்டேன். நான் கண்ட கனா பலிச்சிருச்சே எள்ளுச் செடி மேல இடி விழுந்து கருகியது போல என் வாழ்வு ஆனதே என அழுகிறாள்.

காலால் எட்டி உதைச்சாலே இடிந்து விடும் என் சிறிய வீட்டை இடிக்க கடப்பாரை எதுக்கு எனக் கேட்கிறாள். இவ்வீட்டைக் கட்ட நான் பட்டபாடு நாய் படுமா? பேய்படுமா என அவள் பட்ட அவஸ்தையை கூறுகிறாள்.

முன் சுவரு எழுப்ப என் மூக்குத்திய அடகு வைச்சேன். பித்தளைக்குடம் வித்து பின் சுவரு கட்டினேன். கதவுக்கு மரம் வாங்க காசில்ல அதனால கோணியில கதவு செஞ்சு மாட்டிவிட்டேன்.

சீட்டுக்கு பணம் புடிச்சு, சித்தாளு வேலை செஞ்சு சிறுக சிறுக சேர்த்து வைச்சு கூரைக்கு ஓடு வேய்த்தேன்.

இவ்வாறு ஒரு ஏழைப் பெண்ணொருத்தியின் கனவு வீடு இடிக்கப்படும் அவலத்தினை கவிஞர் எடுத்துரைக்கிறார்.

30. <u>பாரதியார் பற்றிக்குறிப்பு எழுதுக.</u>

- ✓ 11.12.1882-இல் எட்டயபுரத்தில் சின்னசாமி அய்யருக்கும் இலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.
- ✓ இவர் ‘பாரதி’ என்ற பட்டம் பெற்றவர்.
- ✓ விடுதலை உணர்வு, சமூகச்சீர்திருத்தம், தமிழ்மொழிப்பற்று இவர் பாடல்களில் விஞ்சி நிற்கும் உணர்வாகும்.
- ✓ சொற்புதிது, சுவை புதிது சோதி மிகக் நவகவிதையைப் பாடிய மகாகவி என்று அழைக்கப்பட்டார்.
- ✓ சுதேசிமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா ஆகிய இதழ்களின் ஆசிரியர்.
- ✓ குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலிசபதம் போன்ற படைப்புகள் மிகச்சிறந்தவை.
- ✓ மண் விடுதலை பெண் விடுதலைப்பற்றிப் பாடிய புரட்சிக்கவிஞர்.
- ✓ இவர் மனைவியின் பெயர் செல்லம்மாள்.
- ✓ திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் யானை தள்ள செப்டம்பர் 11ஆம் நாள் 1921-இல் பாரதியார் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

31. <u>வாழை மரம் தன் நிலையோடு இன்றைய ஏழைகளின் நிலையை ஒப்பிடும் பாங்கினைக் கூறுக. (அல்லது)</u>

<u>சமுதாய உணர்வு மிக்கவர் மு.மேத்தா என்பதை 'வாழை மரத்தின் சபதம்' என்ற கவிதை வழி நிறுவுக.</u>

<u>வாழை சொல்லும் தத்துவம்:</u>

மரங்களில் நான் ஏழை, நாட்டோர் எனக்கு வைத்த பெயர் வாழை என்பதாகும். கருத்தாங்கிப் பிள்ளையினைப் பெற்றெடுத்த பின்னர்க் கண் மூடும் தாய் போன்றவள் நான். எனக்குக் கீழே குருத்து விடும் பக்கக் கன்றுகளுக்கு வழியை விட்டுக் குறிப்பறிந்து நான் ஒதுங்கி விடுவதால் அடுத்தத் தலைமுறையின் தத்துவத்தைப் புவிக்குக் காட்டும் தடயமாக நான் திகழ்கிறேன்.

<u>மண்ணின் உறவு:</u>

வானத்தைத் தொடும் அளவிற்கு வளரவேண்டும் என்ற கனவு காணும் வழக்கம் என்னிடத்தில் இல்லை. அதற்கான மயக்கமும் இல்லை. மானிடரின் புழுத்கால் பிதிகின்ற இந்த மண்ணிடத்தில் தான் எனக்கு உறவு அதிகம். ஆதலாலே மரங்களிலே நான் குட்டைமரம். மனிதர்களின் கைகளுக்கு எளிதாக எட்டும் மரமாக இருக்கின்றேன்.

<u>விளம்பரங்கள்:</u>

மனிதர்கள் செய்யும் சிவப்பு விளம்பரங்கள் சுவரின் முதுகில் மாட்டியிருக்கும். ஆனால் நானோ தானாய் எழுந்து தட்டி கட்டிய தரையின் பச்சைநிற விளம்பரப் பலகையாக உள்ளேன்.

<u>அடையாள மரம்:</u>

அழைப்பிதழ்கள் திருமணத்தின் அறிமுகங்கள். ஆனால் நாங்கள் தெய்வங்கள் இருக்கும் கோவிலில் காவலாய் இருக்கும் துவார பாலர்களைப்போல், திருமணம் நடக்கும் வீட்டை மற்றவர்கள் அறிந்து கொள்ள அடையாள மரமாகவும், காவல்காக்கும் துவார பாலகராகவும் உள்ளோம்.

<u>குறையை நிறையாக்குதல்:</u>

மரங்களில் குட்டை மரம் என்னும் குறை எனக்கிருந்தாலும். என்னுடைய பெரிய இலைகளால் அந்த அவப்பெயரைத் தள்ளி நிறையாக்கியவன். என் இலைகள் மயிலிடம் கடன் வாங்காத பச்சை நரம்புகளால் ஆன தோகைகளைப் போல இருக்கும்.

<u>விருந்தோம்பல்:</u>

சமையற்கலை, என்னுடைய இலை என்னும் வாகனத்தில் ஏறிவரும் போது உபசரிப்பின் இலக்கியமாக விளங்கும். விரல்களின் மூலம் விருந்தினர்களின் நன்மதிப்பும், விரைவான வரவேற்பும் கிடைக்கும்.

<u>வாழையின் வருத்தம்:</u>

உலகில் வாழும் மனிதர்கள் எல்லாம் உண்பதற்கு முன்னர் என்னை 'இலை' என்பார்கள். சாப்பிட்டு முடித்த உடனேயே என்னை 'எச்சில் இலை' என்று குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்து விடுவார்கள். மக்கள் கூட்டத்தில் மரியாதையுடன் இருக்கும் நாங்கள் குப்பைத் தொட்டிகளில் கிடக்கும்போது ஆயாச மூச்சு விட்டபடி இருப்போம்.

<u>சமுதாயத்தின் அவலம்:</u>

குப்பைத் தொட்டியில் இருக்கும் இலையில் உள்ள உணவையும் துடைத்துச் சாப்பிடுவதற்கு இந்த நாட்டில் எல்லாத் தெருக்களிலும் இருக்கும் தெரு இராஜாக்கள் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரள்கிறதைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் இந்தச்

சமுதாயம் அடைய இருக்கும் இருட்டை எண்ணிப் பதைக்கிற, என் இதயம் படும் வேதனையை வார்த்தைகளால் சொல்ல உவமைகள் ஏதும் இல்லை என்று கூறுகிறார்.

இந்திய நாட்டின் எதிர்காலம் பற்றிக் கவிஞர் கொண்ட கவலையின் வெளிப்பாடுதான் இது. இவ்வகையில் வாழை மரத்தைப் பற்றிக் கற்பனைச் சிறப்போடு பாடினாலும், நடைமுறையில் உள்ள சமுதாய அவலத்தை சொல்லத் தயங்கவில்லை என்பதிலிருந்து கவிஞரின் சமுதாய உணர்வு வெளிப்படுகிறது.

32. <u>தாலாட்டு பாடலில் வெளிப்படும் உறவின் பாசத்தை வெளிப்படுத்துக.</u>

தாலாட்டுப் பாடல் என்பது தாயின் அன்பை மட்டுமல்லாது தாயின் பாடல்வழி மற்ற உறவுகளின் பாசத்தையும் வெளிப்படுத்துகிறது.

<u>தாய்மாமன்:</u>

ஒரு தாய் தன் உடன்பிறந்த உறவான மாமன் உறவையே முதலில் பாடுகிறாள். உயர்ந்த தலைப்பாகை கட்டி மனமகிழ்வோடு வல்ல வட்டு வேட்டி கட்டி சபையில் பேசும் பெருமை கொண்டவனோ உன் தாய்மாமன்.

காடுகளுக்குச் சென்று வேட்டை நாயை ஏவிவிட்டு வேட்டைக்கு போகும் வீரனோ உன் சின்ன மாமன். அவன் வேட்டைக்குப் போகையிலே பன்றியும் பதினெட்டு மானும் சிக்குகின்றன. மேலும் சிங்கமும் கண்படுமோ என என் தம்பியின் வீரத்தை தாலாட்டில் பாடுகிறாள் தாய்.

<u>அழுகையின் காரணம்:</u>

குழந்தை அழும்போது அதன் அழுகையை நிறுத்த தாய் படாதபாடு படுவாள். யார் அடிச்சதால் நீ அழுகிற உன்னை அடிச்சாரை சொல்லியழு என் கண்ணே! பாட்டி அடிச்சாளோ பால் வார்க்கும் கையாலே, மாமன் அடிச்சானோ மல்லிகைப் பூச் செண்டாலே, அத்தை அடிச்சாலோ அரளிப்பூச் செண்டாலே, அண்ணன் அடிச்சானோ அணைத்தெடுக்கும் கையாலே. அடிச்சாரை சொல்லி அழு, அவருக்கு தண்டனைகள் கொடுத்திடுவேன். தொட்டாரைச் சொல்லி அழு, தோள் விலங்கு போட்டிடுவோம்.
என்று தன் குழந்தையின் அழுகையை சமாதனப்படுத்தும் நோக்கில் அனைத்து உறவுகளையும் குழந்தைக்கு சொல்லித் தருகிறாள். தாலாட்டுப்பாடல் குழந்தையின் அழுகைக்கு மட்டும்ல்லாது உறவுகளின் பாசத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

33. <u>ஒப்பாரி பாடல் வெளிப்படுத்தும் கணவனை இழந்த பெண்ணின் மன உணர்வினை எழுதுக.</u>

ஒரு பெண் தனக்கு நேர்ந்த இழப்பைத் தாங்க இயலாத பொழுது சோக உணர்ச்சிகளின் வடிகாலாக ஒப்பாரிப் பாடப்படுகிறது. மற்ற உறுவுகளை விட தன் கணவனை இழந்த பெண் படும் பாட்டையே அதிகம் ஒப்பாரி பாடல் பிரதிபலிக்கிறது. ஆலமரம் போல் அசையாது என்னுடனே இறுதிவரை நிலையாக இருப்பேன் என்று கூறியவன் இன்று இல்லை. அதனால் அவள் மனம் கரையிடிஞ்சு மரஞ்சாய்ந்தது போல கவலை கொண்டாள்.

கணவனின் நினைவுகள் மனதில் நெருஞ்சி முள்ளாய்க் குத்துவதை,

"சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டூடே
நில்லென்று சொல்லி நிலை நிறுத்திப் போனீரே"

என்ற வரிகளின் மூலம் வெளிப்படுத்துகிறாள்.

ஆற்றங்கரையோரம் அன்னத்தை மேய விட்டேன். அன்னம் என்றும் பாராமல் அம்பு கொண்டு எய்தார்கள்.

தலைசீவி தாழம்பூ சூடி அழகு பார்த்த என் தாயும் இன்று நான் பூச்சூடாமல் போகும்படி என் தலையெழுத்து மாறும் என அறியவில்லை.

நான் மட்டும் அழவில்லை. உன் அன்பு குணத்துக்காக இவ்வூரே அழுகின்றது. மானழுக மயிலழுக மாடப்புறாக் குஞ்சழுக, சிவகிரி சனமெல்லாம் தெருத் தெருவாய் நின்றழுக யார் யார் வந்து கூப்பிட்டாலும் அசையாமல் நின்ற மகராசனே எமன் வந்து கூப்பிடவும் என்னைவிட்டு போனீரே, பூந்தேரு ஏறி விட்டீரே என ஒப்பாரிப் பாடல் மூலம் தன் வேதனையை வெளிப்படுத்துகிறாள்.

34. <u>கனவு நாயகன் அப்துல் கலாமின் பெருமையினை அப்துல் ரகுமான் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?</u>

இன்றைய தமிழ் கவிஞர்களின் தலைமைச் சான்ற கவிஞர்களில் அப்துல் ரகுமானும் ஒருவர். 2015 ஆம் ஆண்டு தினமணி வெளியிட்ட சிறப்பு மலரில் அப்துல் ரகுமான் எழுதிய கவிதை இதுவாகும்.

<u>*கலாமின் படிப்பு:*</u>

இஸ்லாம் உன்னைப் பெற்ற தாய் ஆனால் உன்னை ஊட்டி வளர்த்தவள் தமிழ் அன்னையாவாள். அரசுப் பள்ளியில் படித்தவர்கள் பெரிய பதவிகளுக்கு வர முடியாது என்று எண்ணி இன்று பலரும் தனியார் பள்ளிகளுக்கு படையெடுக்கின்றனர். ஆனால் அந்நிலையை அன்றே மாற்றியவன் நீ. இன்று எல்லாப் பள்ளி மாணவர்களின் கனவு நாயகனாக நீ விளங்குகின்றாய்.

<u>*விருதுகள்:*</u>

விருதுகள் பெறுவதால் சிலர் பெருமைப் படுத்தப்படுகிறார்கள். ஆனால் ஒரு சிலரால் மட்டுமே விருதுகளும் பெருமை அடைகின்றன. இன்று உன் பெயரால் பல விருதுகள் வழங்கப்படுகின்றன.

குடியரசு தலைவராய் பொறுப்பேற்று பணி செய்தாய். ஆனால் குடிமக்களின் மனதில் குடியேறிய போதே நீ பெருமை கொண்டாய். உன் அக்னிச் சிறகுகள் இந்த நாட்டிற்கு உலகம் போற்றுப் புகழினைப் பெற்றுத் தந்தது.

<u>*செயற்கை கால்கள்:*</u>

அப்துல் கலாம் பல ஏவுகனைகளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய போது பட்ட மகிழ்ச்சியை விட மெல்லிய தகடுகளாக செய்த கால்களை போலியோ சிறுவர்களுக்கு அற்பணித்த போதே பெரு மகிழ்ச்சி கொண்டாய். ஏவுகணைகளின் வெற்றியை விட மக்கள் மனதில் ஏற்றம் கொண்டதையே பெரும் தவமாகக் கொண்டார்.

இவ்வாறு அப்துல்கலாமின் பெருமைகளை கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

35. <u>பேரன்பு கொண்டவரே என்ற பாடல் இடம் பெற்றுள்ள காப்பியம் எது? பாடியவர் யார்?</u>

பேரன்பு கொண்டவரே என்ற வரிகள் இடம் பெற்றுள்ள காப்பியம் புரட்சிக்கவி. பாடியவர் பாரதிதாசன்.

36. <u>கவிஞர் மேத்தாவின் படைப்புகள் யாவை?</u>

ஊர்வலம், கண்ணீர் பூக்கள், காத்திருந்த காற்று, கருப்பு குதிரைகள், மணிமகுடம், சோழநிலா ஆகாயத்தில் அடுத்த வீடு போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹிப் கலை & அறிவியல் கல்லூரி

37. <u>தலமுறையின் தத்துவத்தை புவிக்குக் காட்டுவது எது?</u>
வாழையடி வாழை என தலைமுறை தொடர்ந்து வரும் பரம்பரைத் தத்துவத்தை இந்த உலகிற்குக் காட்டும் அடையாளம் வாழைமரமாகிய நான்தான்.

38. <u>கவிக்கோ அப்துல் ரகுமான் பற்றிக் குறிப்பு வரைக.</u>
- ✓ கவிக்கோ அப்துல்ரகுமான் புதுக்கவிதையின் முன்னோடி. படிம ம், குறியீடு, தொன்ம ம், சிலேடை இவர் கவிதைகளில் நிறைந்து இருக்கும்.
- ✓ பால்வீதி, நேயர் விருப்பம், அவளுக்கு நிலா என்று பெயர், மரணம் முற்றுப் புள்ளி அல்ல போன்ற பல படைப்புகளைத் தந்த மாபெரும் கவிஞர் கவியரசு கண்ணதாசனால் தமிழ்நாட்டு கலில் ஜிப்ரான் எனப் பாராட்டப்பட்டவர்.
- ✓ ஆலாபனை என்னும் கவிதை நூலுக்காக 1997-இல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றவர். வாணியம்பாடி இசுலாமிய கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். கவிராத்திரி என்ற கவியரங்க அமைப்பைத் தமிழுக்கு அறிமுகப் படுத்திய தமிழறிஞர். 02.06.2017 அன்று சென்னையில் மறைந்தார்.

39. <u>ஆசியஜோதி எந்நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது?</u>
எட்வின் அர்னால்டு எழுதிய லைட் ஆப் ஆசியா என்ற நூலில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

40. <u>வைரமுத்து பற்றி குறிப்பு வரைக.</u>
- வானொலியில் புதுக்கவிதையைப் பாடிய பெருமைக்குரியவர் நாடறிந்த கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர்.
- புதிய இளம் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவர்.
- சிகரங்களை நோக்கி, ரத்ததானம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கவிராஜன் கதை, கொடி மரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள், வைகறை மேகங்கள், போன்ற புதுக்கவிதைத் தொகுப்புகளையும் தண்ணீர் தேசம், வில்லோடு வா நிலவே கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம் முதலான புதினங்களையும் படைத்தவர்.
- வைரமுத்து அவர்கள் கல்லூரியில் படிக்கும் போது எழுதிய கவிதைத் தொகுப்பு அவர் படிக்கின்ற காலத்திலேயே பாடத்திட்டமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
- கலைமாமணி, பத்மஸ்ரீ, சாகித்திய அகாதமி விருதுகளைப் பெற்றவர். திரைப்படப் பாடல்களுக்காக, ஏழுமுறை தேசிய விருது பெற்றவர்.

41. <u>பாரதிதாசன் பற்றிக் குறிப்பு வரைக.</u>
- ⋆ பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம், பாரதியார் மீது கொண்ட மரியாதையால் பாரிதாசன் என்று பெயரை மாற்றிக் கொண்டார்.
- ⋆ 1891 - ஏப்ரல் 29-ஆம் நாள் புதுவையில் பிறந்தார்.
- ⋆ சாதி, மத வேற்றுமைக்கு எதிரானவர், பகுத்தறிவு, மொழி உணர்வு, இன உணர்வு, கடவுள் மறுப்பு போன்ற உணர்வுள்ள பாடல்களை எழுதியுள்ளார்.
- ⋆ இவரது பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது.
- ⋆ புரட்சிக்கவி, பாவேந்தர் - என்ற பட்டம் பெற்றவர்.
- ⋆ தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவர்.
- ⋆ 1955 - ல் புதுவை சட்டமன்ற அவைத்தலைமை ஏற்றார்.
- ⋆ சென்னை மெரீனாக் கடற்கரையில் பாரதிதாசனுக்குச் சிலை அமைக்கப்பட்டது.

- ★ பெண் விடுதலை, விதவை மறுமணம், பொதுவுடமை இயற்கை வருனணைகள் இவர் கவிதையில் நிறைந்திருக்கும்.
- ★ 1964 - ஆம் ஆண்டு ஏப்ரல் 21 - ல் மறைந்தார். பல திரைப்படங்களுக்கு பாடல் எழுதியுள்ளார்.

42. <u>கண்ணதாசன் - குறிப்பு வரைக.</u>
- ★ பிறந்த ஆண்டு - 24.06.1927
- ★ பிறந்த ஊர் - காரைக்குடியில் சிறுகூடல் பட்டி என்னும் சிற்றூர்.
- ★ தந்தை - சாத்தப்ப செட்டியார்
- ★ தாய் - விசாலாட்சி
- ★ இயற்பெயர் - முத்தையா.
- ★ உலகம் அறிந்த பல திரைப்பட பாடல்களை இயற்றியவர். காமராசர் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். நாத்திகனாய் இருந்து ஆத்திகனாக மாறி வாழ்வியல் தத்துவத்தை உணர்ந்தவர்.
- ★ இறப்பு - அக்டோபர் 17, 1981 (அகவை 54). சிக்காகோ, இலினொய், ஐக்கிய அமெரிக்கா.

43. <u>கவிஞர் அறிவுமதி பற்றிக் குறிப்பு வரைக.</u>
- ★ கவிஞர் அறிவுமதியின் இயற்பெயர் மதியழகன். அறிவழகன் என்ற தமது நண்பர் பெயரின் முதல் பகுதியையும், தமது இயற்பெயரான மதியழகன் என்பதின் முதல் பகுதியையும் இணைத்து அறிவுமதி என்று வைத்துக் கொண்டார். விருத்தாசலத்திற்கு அருகில் உள்ள சு. கீணனூரில் பிறந்தவர். கவிதை, கதை, உரைநடை என பல நிலைகளில் தமது படைப்புகளை இயற்றியுள்ளார்.
- ★ மொழிக் கலப்பையும், மொழிச்சிதைவையும் செய்ய வேண்டிய நிலை இருப்பதால் திரைத்துறையிலிருந்து விலகியவர். இதன் மூலம் இவரின் தமிழ்ப்பற்றை அறிய முடிகிறது.
- ★ பல இளைய கவிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் வளர்க்க்உம தாயாகவும் திகழ்பவர். தமிழினம் தலைநிமிரத் தொடர்ந்து தமிழ்பணி ஆற்றி வருபவர்.

44. <u>உவமைசொல்ல முடியாத அளவு வாழை கொண்ட இதய வேதனையாக ஆசிரியர் குறிப்பிடுவதை விளக்குக</u>.

(அல்லது)

<u>இதய வேதனைக்கு உவமைகள் ஏது? விளக்குக?</u>
- ➢ வாழைமரத்தின் பயன்பாடு பெரிது. தன்னலம் கருதாது; தன் இனத்தை வாழ வைப்பது; தான் மடிந்து இளைய தலைமுறைக்கு வழிவிடுவது.
- ➢ வாழை மரம் மங்களச் சின்னம்; அதன் அழகிய இலைகள் தோகைகள் போலப் பசுமையானவை; வாழை இலையால் கவிஞர் வாட்டம் கொள்கிறார். காரணம் மானிடரே! எச்சில இலைக்காக மனிதர் நடத்தும் செயல் அவருக்குக் கவலை தருகிறது.
- ➢ வாழை இல்லாமல் மங்கள காரியம் நடப்பதில்லை; உயிர் தரும் உணவு வாழை இலையில் தான் பரிமாறப்படுகிறது! உபசரிப்பின் இலக்கியமான அது, விருந்துக்குப் பின்னர் எச்சில் இலையாக எறியப்படும்போது, அதற்காக மானிடர் போட்டிப் போடுவது கவிஞரை வாழ்வியலோடு எண்ண வைக்கிறது.

- சமுதாய உணர்வு பெறுகிறார். இந்தத் தெரு ராஜாக்கள் இவ்வாறு இலைக்காக - இலையையும் துடைத்துச் சாப்பிடப் போடும் சண்டையை எண்ணிக் கவலை கொள்கிறார்.
- அக்கவலையை உவமையில் வடித்துக் கூற இயலா அளவிற்குக் கவிஞருக்கு இதய வேதனை அளிக்கிறது அக்காட்சி.

மரீத் ஹாஜி இஸ்மாயில் சாகிப் கலை & அறிவியல் கல்லூரி